Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, DECEMBER 27, 2022

செவ்வாய்க்கிழமை டிசெம்பர் 27, 2022 | ஒளி: 08 கதிர் 173 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

கடன்களுக்காக

இனியும் கையேந்த முடியாது

புதிய இலங்கைத் தூதுவர்களிடம் பிரதமர் தெரிவிப்பு

பாரம்பரிய இராஜதந்திர முறைக்குப் பதிலாக பொருளாதார இராஜதந்திரத்திற்கு உலகம் முன்னுரிமை அளித்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார். முதலீட்டை ஈர்ப்பதற்கும், ஏற்றுமதி மற்றும் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கும், அனைவருடனும் நட்புறவான, நடுநிலையான அணிசேரா நாடு என்ற நற்பெயரை மேம்படுத்தும் நோக்குடன் செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார். இலங்கையின் புதிய தூதுவர்களுக்கும் பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கும் இடையில் நேற்று (26) அலரி மாளிகையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த கலந்துரையாடலில் 16 புதிய தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்கள் கலந்துகொண்டனர்.

தொடர்ச்சி P2

குடும்பத்தினருடன்

அமெரிக்காவுக்கு பறந்தார் கோட்டா

டி.கே.ஜி கபில

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அவருடைய குடும்ப உறுப்பினர்கள் நால்வர், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக அமெரிக்கா நோக்கி பயணமாகியுள்ளனர்.

தொடர்ச்சி P2

ஆபத்தான போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை

புனர்வாழ்வுக்கு அனுப்ப வேண்டாம்

ஹெரோயின் மற்றும் ஐஸ் உள்ளிட்ட ஆபத்தான போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை சிறைச்சாலை புனர்வாழ்வுக்கு அனுப்ப வேண்டாம் என அனைத்து நீதிவான்களுக்கும் நீதிச்சேவை ஆணைக்குழு அறிவித்துள்ளது. அத்தகைய போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை முடிந்தவரை சிறைச்சாலை புனர்வாழ்வுக்கு அனுப்புவதற்குப் பதிலாக, புனர்வாழ்வு ஆணையாளர் நாயக பணியகம், அபாயகரமான போதைப்பொருள் கட்டுப்பாட்டு மையங்கள் அல்லது சமூக திருத்த நிலையங்களுக்கு அனுப்புமாறு நீதிச் சேவை ஆணைக்குழு நீதிவான்களுக்கு கடிதம் எழுதியுள்ளது.

தொடர்ச்சி P2

சுனாமி நினைவேந்தல்

இலட்சக்கணக்கான மக்களின் உயிர்களை காவு கொண்ட ஆழிப்பேரலையின் 18 ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று (26) நாட்டில் பல்வேறு பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

தொடர்ச்சி P2

11 மாதங்களில் 497 கொலைகள்

இந்த வருடத்தின் முதல் 11 மாதங்களில் 497 கொலைகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் அறிக்கைகள் உறுதிப்படுத்துவதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்தார். அந்த கொலைகளில் 46 சதவீதமானவை (223 கொலைகள்) கடுமையான தாக்குதல்களினால் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். அத்துடன், 2022ஆம் ஆண்டின் முதல் 11 மாதங்களில் பல்வேறு காரணங்களுக்காக 3,596 ஆட்கடத்தல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் அறிக்கைகளை மேற்கோள் காட்டி பேராசிரியர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

உள்ளூராட்சி மன்றங்கள்

ஜனவரி 10க்கு முன் கலைக்கப்படும்

எதிர்வரும் ஜனவரி 10ஆம் திகதிக்கு முன்னர் நாட்டில் உள்ள அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் கலைக்கப்படும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஜனாதிபதியுடன் பேச முன்னர்

தமிழ்த்தேசியக் கட்சிகள் கொழும்பில் கூடவுள்ளோம்

தமிழ்த்தேசிய பிரச்சினைக்கு தீர்வை எட்டுவதற்கான பேச்சுவார்த்தை ஜனவரி இரண்டாம் வாரமளவில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்பாக தமிழர் தரப்பு எத்தகைய விடையத்தை கலந்துரையாடவுள்ளோம் என்பதை தமிழ்த்தேசியக் கட்சிகள் கொழும்பில் ஆராயவுள்ளோம் என இலங்கை தமிழரசுக் கட்சி தலைவர் மாவை.சேனாதிராஜா தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் நாங்கள் பிளவுபட்டு தனித்தனியா கட்சிகள் போட்டியிடுவதன் மூலம் எங்களின் ஒற்றுமைக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2

வியாழனன்று இறுதித் தீர்மானம்

இதுவரை 120 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன

அரசியலமைப்பு பேரவைக்கு சிவில் சமூகப் பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பான இறுதித் தீர்மானம் எதிர்வரும் வியாழக்கிழமை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. சிவில் பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பில் இறுதி தீர்மானம் எடுப்பதற்காக அரசியலமைப்பு பேரவை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடவுள்ளது.

தொடர்ச்சி P2

55 ரூபாய்க்கு முட்டை விற்க இணக்கம்

இந்த மாத இறுதிக்குள், கோழி முட்டை ஒன்றை 55 ரூபாய்க்கு விற்பனை செய்யவதற்கு கோழிப் பண்ணை உற்பத்தியாளர் சங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்தது. விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுக்கு கோழிப் பண்ணை உற்பத்தியாளர்கள் சங்கம் உள்ளிட்ட தொடர்புடைய சங்கங்களுக்கும் இடையே விவசாய அமைச்சில் திங்கட்கிழமை (26) இடம்பெற்ற கலந்துரையாடலிலேயே இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

இலங்கை இராணுவ அதிகாரிக்கு எதிரான தடை

எங்களால் எதுவும் செய்ய முடியாது

இலங்கை இராணுவ அதிகாரிகளுக்கு அமெரிக்கா தடைகளை விதித்துள்ளமைக்காக இலங்கை அரசாங்கம் அமெரிக்காவுடன் முரண்பாடுகளை ஏற்படுத்திக்கொண்டு மோதல் போக்கை கடைப்பிடிக்காது என வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

சீரற்ற வானிலையால் 2 பேர் பலி; 7பேர் காயம்

நாட்டில் நிலவிய சீரற்ற வானிலை காரணமாக 2 பேர் உயிரிழந்துள்ளதுடன், 7 பேர் காயமடைந்துள்ளதாகத் தெரிவித்த அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம், 4 மாவட்டங்களில் 387 குடும்பங்களைச் சேர்ந்த 1,675 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தது.

தொடர்ச்சி P2

அதிக அரச விடுமுறை

190 நாடுகளில் இலங்கைக்கு 4ஆம் இடம்

உலகில் அதிக அரச விடுமுறைகளை கொண்ட நாடுகளில் நான்காம் இடம் இலங்கைக்கு கிடைத்துள்ளது. உலகில் உள்ள 190 நாடுகளில் இலங்கைக்கு இவ்வாறு நான்காம் இடம் கிடைத்துள்ளது. இந்த பட்டியலில் 32 விடுமுறை நாட்களுடன் முதலாம் இடத்தில் மியன்மார் உள்ளதுடன், இரண்டாம் இடத்தில் நேபாளம் (30 விடுமுறை நாட்கள்), மூன்றாம் இடத்தில் ஈரான் (26 விடுமுறை நாட்கள்), இலங்கை (25 விடுமுறை நாட்கள்) என தரப்படுத்தப்பட்டுள்ளன. முறையே மலேசியா, பங்களாதேஸ், எகிப்து, கம்போடியா ஆகிய நாடுகள் 5,ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம் இடங்களிலும் இந்தியா (21 விடுமுறை நாட்கள்) ஒன்பதாம் இடத்திலும் தரப்படுத்தப்பட்டுள்ளது.

டிலான் மீது தாக்குதல்

4பேர் சிக்கினர்

சமூக ஊடக செயற்பாட்டாளர் டிலான் சேனாநாயக்க கூரான ஆயுதத்தால் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான நிஹால் தல்துவ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இறக்குமதி கட்டுப்பாடுகள்

சில மாதங்களில் தளர்த்தப்படும்

இலங்கையில் தற்போது பல பொருட்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இறக்குமதி கட்டுப்பாடுகளை அடுத்த சில மாதங்களில் தளர்த்துவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய உறுதியளித்துள்ளார். இந்த வருட ஆரம்பத்தில் நாட்டில் ஏற்பட்ட அந்நிய செலாவணி தட்டுப்பாடு காரணமாக 1,465 வகையான பொருட்களுக்கு கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

இனியும் கையேந்த முடியாது

முதலீட்டை ஈர்ப்பதற்கும், ஏற்றுமதி மற்றும் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதற்கும், அனைவருடனும் நட்புறவான, நடுநிலையான அணிசேரா நாடு என்ற நற்பெயரை மேம்படுத்தும் நோக்குடன் செயற்பட வேண்டும் என புதிய தூதுவர்களிடம் பிரதமர் கூறினார். நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடி மற்றும் கடன் மறுசீரமைப்பு குறித்து கருத்துத் தெரிவித்த பிரதமர், உதவிகள் மற்றும் கடனின் மீது தங்கியிருப்பதைப் பார்க்கிலும் உற்பத்தி, ஏற்றுமதி மற்றும் துரித அபிவிருத்தியை அடைந்துகொள்ளக் கூடிய வகையில் முதலீடுகள், கூட்டு முயற்சிகள் மற்றும் இருதரப்பு கூட்டாண்மைக்காக உழைக்குமாறு இலங்கை தூதுவர்களிடம் கேட்டுக் கொண்டார்.

அதிக முதலீடு, வேலை வாய்ப்புகள் மற்றும் அபிவிருத்தி உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்காக வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்கள் மற்றும் அவர்களது சங்கங்களுடன் நெருக்கமாகப் பணியாற்ற வேண்டும். விரைவான பொருளாதார மீட்சியை அடைந்து, விவசாயம், கைத்தொழில், தகவல் தொழிநுட்பம் மற்றும் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்கும், உணவில் தன்னிறைவு அடைவதற்கும் இலங்கையின் முயற்சிகளுக்கு நட்பு நாடுகள் ஒத்துழைக்க முடியும் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார். மேலும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் தாபிக்கப்பட்ட முதலீட்டு மற்றும் ஏற்றுமதி ஊக்குவிப்பு குழுக்களுக்கு அதிகபட்ச ஒத்துழைப்பை வழங்குமாறும் பிரதமர் வலியுறுத்தினார்.

இந்த நிகழ்வில் முன்னாள் வெளிவிவகார செயலாளர்களான சித்ராங்கனி வாகீஸ்வர (அவுஸ்திரேலியா) மற்றும் அட்மிரல் பேராசிரியர் ஜெயநாத் கொழம்பகே (இந்தோனேசியா) மற்றும் மனிஷா குணசேகர (பிரான்ஸ்), எச்.எம். ஜி.ஆர்.ஆர்.கே. மெண்டிஸ் (பஹ்ரைன்), கலாநிதி ஏ.எஸ்.யு. மெண்டிஸ் (வியட்நாம்), வருணி முத்துக்குமாரண (ஜெர்மனி), கபில ஜயவீர (லெபனான்), எம். எச்.எம்.என். பண்டார (இஸ்ரேல்), கே.கே.தெஷாந்த குமாரசிறி (எத்தியோப்பியா), கலாநிதி சானக எச்.தல்பஹேவா (பிலிப்பைன்ஸ்), பிரியங்கிகா விஜேகுணசேகர (ஜோர்தான்), பி.காண்டீபன் (குவைத்), ஹிமாலி அருணதிலக்க (ஜெனீவா), உதய இந்திரரத்ன (ஐக்கிய அரபு இராச்சியம்) மற்றும் சந்தி சமரசிங்க (மெல்பர்ன்) உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

55 ரூபாய்க்கு முட்டை விற்க இணக்கம்

உள்ளூர் சந்தையில் கோழி முட்டையின் விலை தற்போது 70 ரூபாயைத் தாண்டியுள்ள நிலையில், முட்டை விலை உயர்வைக் கட்டுப்படுத்துவதற்கு கைத்தொழில்துறையினரின் பங்களிப்பை அமைச்சர் கோரினார். உள்ளூர் உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் பாதுகாப்பது அரசாங்கத்தின் பொறுப்பு என்று தெரிவித்த அமைச்சர், உள்ளூர் கோழி முட்டை உற்பத்தியாளர்கள் நியாயமான விலையில் முட்டைகளை வழங்காவிட்டால், முட்டைகளை இறக்குமதி செய்ய நேரிடும் என்று வலியுறுத்தினார். தற்போதும் 49 முதல் 55 ரூபாய்க்கு முட்டைகளை வழங்குவதாகவும், ஒரு குறிப்பிட்ட இடைத்தரகர் குழு முட்டைகளை சேமித்து விலையை உயர்த்த முயல்வதாக துறைசார் சங்கத்தினர் சுட்டிக்காட்டினர்.

இம்மாத இறுதியில் இருந்து ஒரு முட்டையை 55 ரூபாவுய்க்கு வழங்குவதற்கு இணங்கிய அவர்கள், முதலில் தினமும் 20 லொறிகளில் முட்டைகளை கொழும்புக்கு அனுப்பி மக்கள் வசிக்கும் பகுதிகளில் உள்ள நுகர்வோருக்கு விற்பனை செய்வதற்கும் ஏனைய நகர்ப்புறங்களுக்கும் குறித்த திட்டத்தை விரிவுபடுத்துவதற்கும் ஒப்புக் கொண்டனர்.

அமெரிக்காவுக்கு பறந்தார் கோட்டா

அவரது மனைவி அயோமா ராஜபக்ஷ, மகன் மனோஜ் ராஜபக்ஷ, மருமகள் மற்றும் பேரப்பிள்ளை ஆகியோர், எமிரேட்ஸ் விமான நிறுவனத்துக்குச் சொந்தமான ஈ.கே.- 649 என்ற விமானம் மூலம் திங்கட்கிழமை (26) அதிகாலை 02.55 மணிக்கு பயணமாகியுள்ளனர்.

கடந்த ஜூலை மாதம் 9ஆம் திகதி இடம்பெற்ற மக்கள் போராட்டத்தை அடுத்து மாலைதீவுக்கு தப்பிச் சென்ற முன்னாள் ஜனாதிபதி, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளில் தங்கியிருந்ததுடன், தனது பதவியையும் இராஜினாமா செய்திருந்தார்.

பின்னர், செப்டெம்பர் 2ஆம் திகதி மீண்டும் நாட்டுக்கு திரும்பிய அவர், அன்றைய தினத்தில் முக்கிய பிரமுகர்களை சந்தித்ததாக செய்திகள் வெளியான நிலையில், தற்போது அவர் மீண்டும் அமெரிக்கா பயணமாகியுள்ளார்.

புனர்வாழ்வுக்கு அனுப்ப வேண்டாம்

இதேவேளை, போதைக்கு அடிமையானவர்கள் சிறைச்சாலைகளுக்கு அதிகளவில் அனுப்பப்படுவதனால் சிறைச்சாலைகளின் உள்ளகக் கட்டுப்பாட்டில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும், சிறைச்சாலைகளில் ஒழுக்கத்தை பேணுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய நீதி அமைச்சுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனவரி 10க்கு முன் கலைக்கப்படும்

நாவலப்பிட்டி பவ்வாகம பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (25) பிற்பகல் இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார். தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் ஜனவரி 5 மற்றும் 10 ஆம் திகதிக்குள் கலைக்கப்படும் என்றார்.

உள்ளூராட்சி மன்றங்கள் கலைக்கப்பட்ட பின்னர் 14 நாட்களுக்குள் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்படும் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்கனவே வேட்புமனுக்களை தயாரித்துள்ளதாகவும் குறிப்பிட்டார். நாவலப்பிட்டி தொகுதியில் பல அபிவிருத்திப் பணிகளைச் செய்திருப்பதால், தேர்தலுக்கு தாம் அஞ்சவில்லை என்றும் மஹிந்தானந்த எம்.பி கூறினார்.

இதேவேளை, தேர்தல் திகதியை ஜனவரி 5ஆம் திகதிக்கு முன்னர் அறிவிக்கவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எங்களால் எதுவும் செய்ய முடியாது

இது அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் சுயாதீனமான நடவடிக்கையாகும், இது தொடர்பில் இலங்கை அரசாங்கம் கரிசனைகளை வெளியிடும், ஆனால் தனிப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் எதனையும் தெரிவிக்க முடியாது எனவும் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். மேலும் , இது சுயாதீனமான செயற்பாடு. அவர்கள் இவ்வாறான விடயங்கள் குறித்து ஆராய்வதற்கான சுயாதீன வழிமுறைகளை கொண்டுள்ளனர். இது தொடர்பில் நாங்கள் செய்யக்கூடியது எதுவுமில்லை என வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

நாங்கள் எங்கள் கரிசனைகளை வெளியிடுவோம் ஆனால் தனிப்பட்ட சம்பவங்கள் தொடர்பில் எதனையும் தெரிவிக்கமாட்டோம், என குறிப்பிட்டுள்ள வெளிவிவகார அமைச்சர் நாங்கள் தொடர்ந்து எங்கள் நிலைப்பாட்டை முன்வைப்போம் ஆனால் எங்களால் எதனையும் செய்ய முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

சுனாமி நினைவேந்தல்

இந்நிலையில் நேற்று, உடுத்துறையில் உணர்வுபூர்வமாக நடைபெறற்றதுடன், சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு 9.25 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் படங்களுக்கு மாலையிட்டு தீபங்கள் ஏற்றி உணவுகளை படையலிட்டு உறவுகள், பொதுமக்கள் அரசியல் தலைவர்கள் அஞ்சலித்தனர். கடந்த 2004 டிசம்பர் 26ம் திகதி ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரலை பேரனர்த்தம் காரணமாக பல்லாயிரம் பொதுமக்கள் உயிரிழந்ததுடன் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களும் அழிந்தமை குறிப்பிடத்தக்கது.

வியாழனன்று...

அரசியலமைப்பின் 21 ஆவது திருத்தத்தின் மூலம் ஸ்தாபிக்கப்பட்ட அரசியலமைப்பு பேரவையில் 10 உறுப்பினர்கள் உள்ளடங்கும் அதேவேளை அவர்களில் மூன்று சிவில் பிரதிநிதிகளும் நியமிக்கப்படுவார்கள். தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், இதுவரை 120 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாகவும் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்காத பொருத்தமான நபர்கள் மற்றும் தற்போதைய விண்ணப்பங்கள் குறித்து ஆய்வு செய்த பின்னர் அரசியலமைப்பு பேரவைக்கு மூன்று பிரதிநிதிகள் நியமிக்கப்படுவார்கள் என்று கூறப்படுகிறது. தெரிவு செய்யப்பட்ட நபர்களின் பெயர்கள் பாராளுமன்றத்தில் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படும், அதன் பின்னர் ஜனாதிபதி அவர்களை அரசியலமைப்பு சபைக்கு நியமிப்பார்.

சீரற்ற வானிலையால் 2 பேர் பலி; 7பேர் காயம்

கண்டி, அக்குறணையில் மண் சரிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து இருவர் உயிரிழந்துள்ளதாகவும் அக்குறணை, துனுவில பகுதியில் உள்ள வீடொன்றின் மீது மண்மேடு வீழ்ந்ததில் அவர்கள் உயிரிழந்துள்ளனர். தென்மேற்கு வங்காள விரிகுடா கடற்பகுதியில் உருவாகிய குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி காரணமாக சனிக்கிழமை (24) பிற்பகல் முதல் ஞாயிற்றுக்கிழமை (25) வரை நாடளாவிய ரீதியில் கடும் காற்றுடன் மழையும் பெய்தது. இதனால் கண்டி, மாத்தளை, அம்பாறை மற்றும் பதுளை ஆகிய மாவட்டங்கள் இந்த நிலைமையால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் (ஊடகம்) பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார். கடும் காற்று மற்றும் மழையினால் அக்குறணையில் ஒரு வீடு முற்றாக சேதமடைந்துள்ளதுடன் 109 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கட்சிகள் கொழும்பில் கூடவுள்ளோம்

நாங்கள் ஒரு அரசியல் தீர்வை எட்டுவதற்காக அரசாங்கத்துடன் போச்சுவார்த்தையை ஆரம்பித்திருக்கின்ற நேரத்தில், தேர்தல் எத்தகைய முறையில் நடைபெற ப்போகின்றது என்பது தெரியாத நிலையில் நாங்கள் விவாதத்திற்கு அனுமதிப்பது ஒட்டு மொத்த தமிழ் மக்கள் மத்தியில் பிளவை, குழப்பத்தை,பலவீனத்தை ஏற்படுத்திவிடும்.

மேலும், ஜனாதிபதியுடன் ஜனவரி மாதம் 10 ,11, 12 ஆம் திகதிகளில் அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கும் தமிழ் மக்களின் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கான முயற்சிகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடாத்துவது தொடர்பில் திகதிகள் குறிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக தமிழ்த்தேசியம் தொடர்பில் செயற்பட்டுவருகின்ற கட்சிகள் ஒன்றிணைந்து குறித்த விடையங்கள் தொடர்பில் கலந்துரையாடிவருகின்ற நிலையில் அதன் தொடர்ச்சியாக ஜனவரி 7, 8 ஆம் திகதிகளில் கொழும்பி கூடி அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி ஆராயவுள்ளோம் என்றார்.

சில மாதங்களில் தளர்த்தப்படும்

எனினும் 795 பொருட்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகளை அரசாங்கம் ஏற்கனவே நீக்கியுள்ளது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில பொருட்கள் நாட்டில் தாராளமாக கிடைக்கின்றன, அல்லது உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யக்கூடிய சில பொருட்கள் உள்ளன. அவற்றின் இறக்குமதியை அரசாங்கம் முற்றாக தடை செய்ய வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். தற்போது 670 தயாரிப்புகள் இறக்குமதி கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டுள்ளதாகவும், ஆனால் அவற்றில் சில பொருட்கள் முற்றிலுமாக தடை செய்யப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். தேங்காய் துருவல், வெசாக் விளக்குகள்

மற்றும் மூங்கில் தொடர்பான பொருட்கள் போன்ற பொருட்களை தொடர்ச்சியாக இறக்குமதி செய்ய அனுமதிக்க வேண்டுமா என நிதி இராஜாங்க அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார்.

டிலான் மீது தாக்குதல்

கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினரால் கொழும்பு மற்றும் தெமட்டகொடை பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களிடம் இருந்து இரண்டு கத்திகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடந்த 14ஆம் திகதி இரவு நுகேகொடை, பாகொடை வீதியிலுள்ள டிலான் சேனாநாயக்கவின் கடைக்குள் நுழைந்த இருவரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

கை மற்றும் காலில் வெட்டுக் காயங்களுக்குள்ளான அவர், களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

11 மாதங்களில் 497 கொலைகள்

2021ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கடத்தல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் அந்த வருடத்தில் 835 கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று

நேற்றுடன் 18 ஆண்டுகள்

சுனாமி பேரலை அனர்த்தம் இடம்பெற்று நேற்றுடன் 18 வருடங்கள் பூர்த்தியாகின்றன. இதனை முன்னிட்டு நாட்டின் பல பாகங்களிலும் நினைவு தின நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

இந்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூரும் வகையில் நேற்று (26) காலை 9.25 லிருந்து 9.27 வரை இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மக்களிடம் கோரிக்கை விடுத்திருந்தது. கடந்த 2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ம் திகதி காலை 8.50 மணிக்கு சுனாமி பேரலை நாட்டை தாக்கியது. இதில் சுமார் 40 ஆயிரத்திற்கு மேற்பட்டோர் உயிரிழந்தனர். சுனாமி ஏற்பட்டதன் பின்னர் 2005ம் ஆண்டில் இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டது. இதன்படி அனர்த்தங்களை முன்கூட்டியே அறிவித்தல், அனர்த்தங்களின் போது பாதிப்புக்களை குறைப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்தல் என்பன நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் ஆழிப்பேரலையால் உயிரிழந்த உறவுகளுக்கு வணக்கம் செலுத்தும் நிகழ்வு நேற்று (26-12-2022) நடைபெற்றுள்ளது

ஹட்டனிலும் அஞ்சலி

எஸ்.கணேசன்

சுனாமி ஆழிப்பேரலை இடம்பெற்று நேற்றுடன் 18 ஆண்டு நிறைவடைவதை நினைவு கூரும் வகையில் உயிரிழந்த உறவுகளுக்கு மலையக மக்கள் தமது அஞ்சலியை செலுத்தினர். கடந்த 2004 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இலங்கையின் வரலாற்றில் மிகவும் துயரகரமான நிகழ்வாக காலை 9.25க்கு ஆழி பேரலை அனர்த்தம் இடம்பெற்றது. இவ் அனர்த்தத்தில் உயிர்நீத்த இலங்கை உறவுகளுக்கு தமது அஞ்சலியை மலையக மக்களும் செலுத்தினர்.

ஹட்டன் பொலிஸார், நகர வர்த்தகர்களின் ஏற்பாட்டில் ஹட்டன் புத்தர் சிலைக்கு முன்னால் இடம்பெற்ற அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகளில் ஹட்டன் நகரில் உள்ள வங்கி ஊழியர்கள், நகர வர்த்தகர்கள், சாரதிகள் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், பொது மக்கள் என அனைவரும் இதில் கலந்துக்கொண்டனர்.

யாழில் நினைவேந்தல்

ஆழிப்பேரலையில் உயிர்நீத்த உறவுகளுக்கான 18ஆவது ஆண்டு நினைவேந்தல் யாழ் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கு முன்றலில் நேற்றைய தினம் உணர்வுபூர்வமாக முன்னெடுக்கப்பட்டது. சுனாமி பேரலையில் உயிர்நீத்த உறவுகளின் நினைவுருவ படத்திற்கு அகவணக்கம் செலுத்தி ஈகைசுடரேற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. இதன் பொழுது யாழ் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றிய தலைவர் சி.ஜெல்சின், பல்கலைக்கழக மாணவர்கள், ஊழியர்கள், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

முல்லைத்தீவில் நினைவு நிகழ்வு!

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற ஆழிப்பேரலை தாக்கத்தில் காவுகொள்ளப்பட்ட மக்களின் 18 ஆம் ஆண்டு நினைவு நிகழ்வு நேற்று நாடு தழுவியரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. மூவாயிரத்திற்கும் அதிகமான மக்களை காவுகொண்ட அந்தவகையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் உயிரிழந்த மக்களை நினைவிற்கொள்ளப்பட்டுள்ளது.

ஆழிப்பேரலையால் உயிரிழந்த மக்களை புதைத்த இடமாகிய புதுக்குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்ட சுனாமி நினைவாலயத்திலும் முள்ளியவளை கயட்டையடி பகுதியில் அமையப்பெற்ற சுனாமி நினைவாலயத்திலும் மற்றும் முல்லைத்தீவு நகர்பகுதியில் அமைந்துள்ள சுனாமி நினைவாலயத்தில் முதன்மையாகவும் மற்றும் உயிரிழந்தவர்கள் நினைவாக முல்லைத்தீவு கள்ளப்பாட்டு பகுதியிலும், உயிரிழந்த மாணவர்கள் நினைவாக கள்ளப்பாடு அ.த.க பாடசாலையில் அமையப்பெற்ற நினைவுத்தூபியிலும் நினைவிற்கொள்ளப்பட்டுள்ளது. பொதுச்சுடர் ஏற்றி திருவுருவப்படங்களுக்கும் நினைவு கற்களுக்கும் சுடர் ஏற்றி மலர்தூவி வணக்கம் செலுத்தியுள்ளார்கள். முல்லைத்தீவு நகர்பகுதியில் அமையப்பெற்ற சுனாமி நினைவாலயத்தில் சர்வமத வழிபாட்டுடன் பிரார்த்தனைகள் இடம்பெற்றுள்ளன. பெருமளவான உறவுகள் உயிரிழந்த தங்களின் உறவினர்களுக்கு அஞ்சலிசெலுத்தியுள்ளார்கள்.

திருகோணமலையில் சுனாமி நினைவேந்தல்

தீஷான் அஹமட்

"தேசிய பாதுகாப்பு தினத்தை" முன்னிட்டு சுனாமி நினைவேந்தல் நிகழ்வு நேற்று (26) திருகோணமலை மாவட்டத்தின் வெருகல் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள வெருகல் முகத்துவாரத்தில் இடம்பெற்றது. வெருகல் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் எம்.ஏ.அனஸ் தலைமையில் இவ் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது பூஜை வழிபாடுகள் இடம்பெற்று பின்னர் காலை 9.25 தொடக்கம் 9.27 வரை சுனாமி அனர்த்தத்தில் உயிர் நீத்தவர்களுக்கான மௌன அஞ்சலி இடம்பெற்றது. அத்தோடு உயிர் நீத்தவர்களுக்கு சுடரேற்றி அஞ்சலியும் செலுத்தப்பட்டது. மேலும் கடற்கரையில் மலர்தூவி அஞ்சலியும் செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் குகதாஸ் சுகனதாஸ், கடற்படை அதிகாரிகள், சுனாமியினால் நீத்தவர்களின் உறவினர்கள் என பலரும் கலந்து சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவில் கண்ணீரில் நனைந்த

சுனாமி நினைவாலய வளாகம்

■ சண்முகம் தவசீலன்

ஆழிப்பேரலையால் காவுகொள்ளப்பட்டவர்களின் 18ஆம் ஆண்டு நினைவேந்நல் முல்லைத்தீவு- கடற்கரை வீதியில் உள்ள சுனாமி நினைவாலயத்தில் நேற்றை தினம்(26) உணர்வெழுச்சியுடன் நடைபெற்றது.

உயிரிழந்தவர்களின் உறவுகள் கதறி அழுது கண்ணீர் மல்க, தமது உறவுகளுக்கு மலர் தூவி, தீபமேற்றி

உணர்வுபூர்வமாக அஞ்சலிகளை மேற்கொண்டனர்.

அதேவேளை உயிரிழந்தவர்களின் ஆத்மசாந்திவேண்டி மத வழிபாடுகளும் இடம்பெற்றிருந்தன.

மேலும் இந்த அஞ்சலி நிகழ்வில் பொதுமக்கள் ,மக்கள் பிரதிநிதிகள் ,மத தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர். 2004 ஆம் ஆண்டு இதே நாளில் இடம்பெற்ற ஆழிப்பேரலை (சுனாமி) பேரனர்த்தத்தில் முல்லைத்தீவில் மாத்திரம் 3352 பேர் காவு கொள்ளப்பட்டதுடன் பல நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போய், உடைமைகள், வாழ்விடம் என்பனவும் அழிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அனர்த்த முன்னறிவிப்பால்

பெறுமதியான உயிர், சொத்துக்களை பாதுகாக்கலாம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

அனர்த்த முன்னறிவிப்பின் மூலம் எமது பெறுமதியான உயிர்களையும் சொத்துக்களையும் எங்களால் பாதுகாத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும் என காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதய ஸ்ரீதர் தெரிவித்தார்.

சுனாமி ஆழிப்பேரலை ஏற்பட்டு 18 வருடங்கள் நிறைவையொட்டி சுனாமி உள்ளிட்ட அனர்த்தங்களில் உயிரிழந்தவர்களை நினைவுக்கூர்ந்து நேற்று (26) காலை காத்தான்குடி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இங்கு தொடர்ந்துரையாற்றிய அவர், இந்த நாட்டில் 2004ம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்தத்தம் போன்று இனி

ஏதாவது ஒரு அனர்த்தம் நிகழுமாயின் அதற்கான முன்னறிவிப்புக்கான சகல ஏற்பாடுகளும் வளர்ச்சியடைந்திருக்கின்றன

இனி வரும் காலங்களிலே ஏற்படக் கூடிய அனர்த்தங்களிலே முன்னாயத்தம் என்கின்ற விடயம் மிகவும் அவசியாகும். சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட நாட்டையும் மக்களின் இயல்பு வாழ்க்கையையும் கட்டியெழுப்புவதற்காக அதிகமான பணிகள் பிரதேச செயலகத்தின் ஊடாகவே மேற் கொள்ளப்பட்டன. அதற்காக பாடுபட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்களை நினைவு கூற கடமைப்பட்டுள்ளோம்.

இந்த நாட்டின் பொருளாதாரத்திலே மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் மக்களை அதிலிருந்து மீட்பதற்கும் சகல விடயங்களையும் மறப்பதற்குமான ஏற்பாடுகளை எங்களது பிரதேச செயலக.

இந்த சுனாமி அனர்தத்தினால் பல மாற்றங்கள் நடந்திருக்கின்றன.

இறைவன் அந்த அனர்த்தத்தை தாங்கக் கூடிய சக்தியை ஏற்படுத்தி தந்தான். இனி வரும் காலங்களிலும் இவ்வாறான அனர்த்தங்கள் நிகழும் போது அதற்கான முன்னறிவித்தல்களை தருவதற்கான முறைமைகளை அரசாங்கம் ஏற்படுத்தியிருக்கின்றது என்றார்.

திருகோணமலை சிறைச்சாலையில்

சுத்தமான குடிநீர் திட்டம் ஆரம்பித்து வைப்பு

■ எப்.முபாரக்

திருகோணமலை சிறைச்சாலையில் நான்கு இலட்சம் ரூபாய் செலவில் நிர்மாணிக்கப்பட்ட சுத்தமான குடிநீர் திட்டத்தினை உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சகர் வசந்தகுமார டேப் தலைமையில் நேற்று(26) நடைபெற்றது.

இதனை திருகோணமலை மறை மாவட்ட ஆயர் அதிவணக்கத்திற்குரிய நொயல் இம்மானுவேல் சம்பிரதாயபூர்வாக திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் திருகோணமலை சிறைச்சாலையில் பிரதான ஜெயிலர் ஆர்.மோகனராஜா,சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் உப தலைவர் தயானந்த ஜெயவீர, ஜெயிலர் உத்தியோகத்தர்கள்,புனர்வாழ்வு அதிகாரிகள் உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டார்கள்.

ஆயுர்வேத பரம்பரை வைத்தியர்களுக்கான செயலமர்வு

■ அபு அலா

திருகோணமலை மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத ஆயுர்வேத பரம்பரை வைத்தியர்களுக்கான ஒருநாள் செயலமர்வு அண்மையில் திருகோணமலை முதலமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி இ.ஸ்ரீதரின் தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வுக்கு சுகாதார அமைச்சின் சுதேச மருத்துவ அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் பி.தயானந்தன் கொழும்பு ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்தியர்களான ரீ.சிவகுமார், லலித் அலவத்துகொட கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள திட்டமிடல் பிரிவின் வைத்தியர்களான எஸ்.சிவச்செல்வன், எஸ்.சதீஸ் உள்ளிட்ட வைத்தியர்கள் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது, பரம்பரை வைத்தியர்கள் தொடர்பான சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுக்க நெறிமுறைகள் பற்றியும் நோயாளர்கள் தொடர்பாக கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள், தொழில் தொடர்பாகவும் சட்டம் மற்றும் நீதி தொடர்பான நெறிமுறைகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

மேலும் பரம்பரை வைத்தியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் பதிவு செய்யும் நடைமுறைகள் பற்றி பரம்பரை வைத்தியர்களினால் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு மிக விரிவான விளக்கங்களும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது.

அமைச்சின் செயலாளராகின்றார்

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர்?

■ நிதர்ஷன்

யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனுக்கு அடுத்த வருடம் ஜனவரி முதல் இடம் மாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக மாவட்ட செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவ்வாறு இடமாற்றப்படும் மகேசன் உயர் பதவியாக கொழும்பில் அமைச்சு ஒன்றின் செயலாளராக நியமிக்கப்பட உள்ளதாகவும் தெரியவருகின்றது.

அதே நேரம் கிளிநொச்சி மாவட்ட அரசு அதிபராக கடமையாற்றும் ரூபவதி கேதீஸ்வர்ன ,யாழ் மாவட்ட புதிய அரச அதிபராக நியமிக்கப்படலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை மாவட்ட செயலராக இருந்த மகேசன் மீது ஒரு சில அரசியல் கட்சிகள் தொடர்ச்சியாக குற்றம் சாட்டி வந்த நிலையிலும் அதிலும் ஒரு சிலருக்கு சார்பாக செயல்படுவதாக பலரும் முறைபாடுகள் தெரிவித்திருந்த நிலையிலும் திடீரென அடுத்த வருடம் முதல் இந்த இடம் மாற்றம் வழங்கப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஒட்டுசுட்டான் ஒட்டுத்தொழிற்சாலைக்கு

இராஜாங்க அமைச்சர் சாமர திடீர் விஜயம்

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு- ஒட்டுசுட்டான் ஒட்டுத்தொழிற்சாலைக்கு இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசாநாயக்க திடீர் விஜயம் ஒன்றை இந்த வாரம் மேற்கொண்டிருந்தார்.

ஒட்டுசுட்டான்- கூழாமுறிப்பு பகுதியில் அமைந்துள்ள ஒட்டுத்தொழிற்சாலை நீண்ட காலமாக புணர் நிர்மாணம் செய்யப்படாமல் காணப்பட்ட நிலையில், தற்போது அதன் புணர்நிர்மான வேலைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந் நிலையில் அதனை நேரடியாக ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசாநாயக்க நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் ஆகியோரும் பிரசன்னமாகியிருந்தனர்.

இதன்போது, இன்னும் ஒரு சில மாதங்களில் குறித்த ஒட்டு தொழிற்சாலையை செயற்பாட்டுக்குரியதாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

காத்தான்குடி

பால்வார்த்த ஓடை தோண்டப்பட்டது

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி கடற் கரையிலுள்ள பால்வார்த்த ஓடை நேற்று முன்தினம் (25) தோண்டப்பட்டது.

புதிய காத்தான்குடி பகுதியில் ஏற்படும் வெள்ள அபாயத்தை தடுக்கும் வகையில் இந்த பால்வார்த்த ஓடை தோண்டப்பட்டது.

காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ். எம். அஸ்பரின ஆலோசனைக்கு அமைய, நகர சபை ஊழியர்களினால் இந்த ஓடை தோண்டப்பட்டது.

தற்போது நிலவும் சீரற்ற காலநிலையால் ஏற்படக்கூடிய வெள்ள அபாயத்தை தடுக்கும் பொருட்டு, வெள்ளம் வடிந்து ஓடும் வகையில் இந்த பால்வார்த்த ஓடை தோண்டப்பட்டுள்ளது.

மரங்கள் சரிந்தபோது அக்கரைப்பற்று பிரதேச சபை

துரிதமாக களமிறங்கியது

■ நுருல் ஹுதா உமர்

நேற்று முன்தினம் (25) இரவு அக்கரைப்பற்று -இசங்கணிச்சீமையில் பிரதான வீதியை குறுக்கறுத்து, இரண்டு தேக்கு மரங்கள் முறிந்து விழுந்ததினால் போக்குவரத்து தடைப்பட்டு மின்சாரமும் துண்டிக்கப்பட்டது.

இதனால் பொதுமக்களும், பாதசாரிகளும் அசௌகரியத்தை எதிர்கொண்ட நிலையில், இசங்கணிச்சீமை வட்டாரத்திற்கு பொறுப்பான அக்கரைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் டீ.எம். ஐயூப், அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் எம்.ஏ. றாஸிக்கை தொடர்பு கொண்டு விடயத்தை தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, இலங்கை மின்சாரசபையின் ஒத்துழைப்புடன் பிரதேச சபையின் மரம் அறுக்கும் இயந்திரம் மற்றும் பொதுமக்களின் பொதுமக்களின் உதவியுடன் மரங்கள் அகற்றப்பட்டு வீதி போக்குவரத்து வழமைக்கு கொண்டுவரப்பட்டதுடன் மின்சார இணைப்பும் உடனடியாக சீரமைத்து வழங்கப்பட்டது.

யாழிலும் ஐந்து கைதிகளுக்கு விடுதலை

■ நிதர்சன்

நத்தார் தினத்தையொட்டி, நாடளாவிய ரீதியில் உள்ள சிறைக்கைதிகள் 309 பேர், ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த நிலையில்,யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து கைதிகள் நேற்று முன்தினம் (25) விடுதலை செய்யப்பட்டனர்.

அதற்கமைவாக சிறு குற்றச் செயல்கள் மற்றும் தண்டப்பணம் செலுத்தாமை போன்றவற்றால் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து கைதிகளே பொது மன்னிப்பு வழங்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின்

மாவட்டக் கிளை நிர்வாகக் குழு நியமனம்

■ செ. கீதாஞ்சன்

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்டக்கிளையின் நிர்வாகத் தெரிவுக்கூட்டம் சனிக்கிழமை(24) நடைபெற்றது.

புதுக்குடியிருப்பு பிரதேசசபைக்குரிய மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த கூட்டமானது, இலங்கைத் தமிழரசுக்கட்சியின் நிர்வாகச் செயலாளர் சூசைப்பிள்ளை சேவியர் குலநாயகத்தின் தலைமையில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட கிளைக்கு புதிய தலைவர், செயலாளர், பொருளார், உபதலைவர், உபசெயலாளர், மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

அந்தவகையில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முல்லைத்தீவு மாவட்டக்கிளையின் புதிய தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவப்பிரகாசம் சிவமோகன் தெரிவுசெய்யப்பட்டதுடன், புதிய செயலாளராக முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரனும், புதிய பொருளாளராக தம்பிப்பிள்ளை யோகானந்தராசாவும் தெரிவுசெய்யப்பட்டார்.

ஊடகவிலயாளர்களின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு

■ அபு அலா

மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஊடகவிலயாளர்களின் பிள்ளைகளுக்கு இலங்கை காப்போம் நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள், பாதணிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு மட்டகளப்பு ஊடக அமையத்தில் நடைபெற்றது.

மட்டு. ஊடக அமையத்தின் தலைவர்

சிரேஷ்ட ஊடகவியலாளர் வா.கிருஷ்ணகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு, பிரதம அதிதியாக இலங்கை காப்போம் நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கு.பிரதிப்கரன் கலந்துகொண்டார்.

இதன்போது, இலங்கை பத்திரிகை பேரவையின் 22வது ஆண்டின் மருத்துவக் கட்டுரைக்கான உயர் ஊடகவியல் தேசிய விருதைப்பெற்ற ஊடகவியலாளர் மட்டு. துஷாரா மற்றும் சமூக விழிப்புணர்வு, கலை கலாசார மருத்துவ ஆக்கங்களை பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தி வருகின்ற சிரேஷ்ட ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் ஆகியோர் பாராட்டப்பட்டு, அவர்களுக்கு ஞாபகச்சின்னம் வழங்கி வைக்கப்பட்டது.

விமர்சனங்களை விட தீர்வுத் திட்டங்களே காலத்தின் தேவை

வேலு குமார் எம்.பி

பெருந்தோட்ட பகுதிகளின் வறுமை நிலை உக்கிரம் அடைந்துள்ள சூழ்நிலையில், விமர்சனங்களை விட தீர்வு திட்டங்களே காலத்தின் தேவையாக உள்ளது என கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் தெரிவித்துள்ளார்.

இன்று நாட்டில் மூன்றில் ஒரு பகுதி மக்கள் உணவு பற்றாக்குறை பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர். குறிப்பாக மலையக பெருந்தோட்ட பகுதிகளில் இந்நிலைமை இரண்டில் ஒரு பகுதியினராக உள்ளது.

உணவு பற்றாக்குறை மற்றும் மந்தபோசன நிலைமை மலையக பெருந்தோட்ட பகுதிகளில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலைமையின் தொடர்ச்சியான தன்மை பாரிய சமூக பிரச்சினையை தோற்றுவிக்கக்கூடிய அச்சுறுத்தலை

ஏற்படுத்தியிருக்கின்றது.

முழு நாட்டிலும் ஏற்பட்டுள்ள உணவு பற்றாக்குறை பிரச்சினையை விட அதிகமான தாக்கம் மலையக பெருந்தோட்ட பகுதிகளில் உள்ளது.

பாடசாலை மாணவர்களின் வருகையிலும் இத்தாக்கத்தை காண முடிகின்றது. இப் பிரச்சினையை நாம் மூடி மறைத்துக்கொண்டிருக்க முடியாது.

இன்று தீரும் நாளை தீரும் என காலத்தை இழுத்தடிக்க முடியாது. ஒருவருக்கு ஒருவர் குற்றம் சாட்டி விமர்சனம் செய்வதால் தீர்வு கிடைக்கப்போவதில்லை.

தற்போது ஜனாதிபதி முன்வைத்திருக்கும் உணவு பாதுகாப்பு திட்டத்திற்கு அப்பால் சென்று மலையக பிரதேசத்திற்கான விசேட திட்டம் ஒன்று வகுக்கப்பட வேண்டும். அதற்கான அரச மட்ட பொறிமுறையொன்று ஏற்படுத்த வேண்டும்.

ஆளும்கட்சி, எதிர்க்கட்சி என்று அல்லாது வேலைத்திட்டத்தில் அரசு முன்வைக்கும் சாதகமான விடயங்களுக்கு ஆதரவு வழங்க வேண்டும். அதன் போது மட்டுமே இப்பிரச்சினைக்கு தீர்வொன்றை தேடிக்கொள்ள முடியும். அவ்வாறில்லாது அரசாங்கத்தை மட்டும் குறைக்கூறி விமர்சனம் செய்வதால் எவ்வித தீர்வும் மக்களுக்கு கிடைக்கப்போவதில்லை என்றார்.

மாவனெல்லயில்

சிறுதொழில் அபிவிருத்தி பிரிவினரின் கண்காட்சி

எண்.ஆராச்சி

மாவனல்லை பிரதேச செயலகத்தின் சிறு தொழில் அபிவிருத்தி பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாவனல்லை பிரதேச வர்த்தக சங்க உறுப்பினர்களின் சந்தை மற்றும் கண்காட்சி இன்றும் (27) நாளையும் (28) மாவனல்லை பிரதேச செயலக வளாகத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த இரண்டு நாட்களும் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இந்த சந்தை மற்றும் கண்காட்சி நடைபெறவுள்ளது.

இதன்போது உணவுப் பொருட்கள், உடைகள், அலங்கார பூக்கள், காய்கறிகள் மற்றும் மூலிகைகள், அலங்கார வடிவமைப்புகள், பைகள் போன்றவற்றை பொள்வனவு செய்யலாம் என சிறு தொழில் அபிவிருத்தி பிரிவு தெரிவித்துள்ளது.

ஓதம்மை விளையாட்டுக்கழகத்துக்கு நிதியுதவி

நிலமகம் பிரசாந்த்

பதுளை- ஓதம்பை முதலாம் பிரிவு தோட்ட விளையாட்டு கழகத்துக்குத் தேவையான விளையாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கான நிதியுதவி, மலையக தொழிலாளர் முன்னணியின் அமைப்பு செயலாளர் லெட்சுமனார் சஞ்சயால் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் எதிர்வரும் காலங்களில், ஊவா பகுதியில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு பொருட்களை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் லெட்சுமனார் சஞ்சய் தெரிவித்தார்.

பொகவந்தலாவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கௌரவிக்கப்பட்டார்

ரஞ்சித் ராஜபக்ஷ

அக்கரப்பத்தனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியாக இடமாற்றம் பெற்றுச் செல்லும் பொகவந்தலாவை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரதேசவாசிகளால் கௌரவிக்கப்பட்டார்.

ஏறக்குறைய 4 வருடங்கள் குறித்த பொலிஸ் நிலையத்தில் பிரதான பொலிஸ் பரிசோதகர் சாந்த பண்டாரவை கௌரவிக்கும் நிகழ்வு, பொகவந்தலாவை விவேகராம விகாரையில் நேற்று முன்தினம் (25) நடைபெற்றது.

நான்கு வருடங்களாக திரு.சாந்த

பண்டார அவர்கள் ஆற்றிய பணிக்காக பொகவந்தலாவையில் வாழும் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்கள் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர்.

ஹோல்புறூக் ஆரம்ப பரிவு பாடசாலைக்கு

வர்த்தகரின் முயற்சியால் புதிய கட்டடம்

துவாரகஷான்

400க்கு அதிகமான மாணவர்கள் கல்வி கற்கும் நுவரெலியா கல்வி வலயத்திற்குட்பட்ட கோட்டம் 03 ஹோல்புறூக் ஆரம்ப பிரிவு பாடசாலைக்கு புதிய கட்டடம் ஒன்றை அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இப்பாடசாலைக்குத் தேவையான கட்டட வசதி இன்மையால் மாணவர்கள் கற்பதில் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வந்த நிலையில், இப்பிரதேசத்தில் பிறந்து, வளர்ந்து தற்போது கொழும்பில் வர்த்தகராக இருக்கும் எம். கேசவமூர்த்தி என்பவர் தனது சொந்த செலவில் கட்டடமொன்றை அமைக்க முன்வந்துள்ளார்.

இப்பாடசாலைக்கு புதிய கட்டடம் அமைப்பதற்காக இரண்டு ஏக்கர் காணியும் பெல்மோரல் தோட்ட நிர்வாகம் வழங்கி, மூன்று வருடங்கள் கடந்துள்ள நிலையில் இதுவரை அரசாங்கத்தால் கட்டடங்கள் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்க படவில்லை.

இந்த நிலையில், இந்த மாணவர்களின் நலன் கருதி, ஒரு கோடி ரூபாய் செலவில் சகல வசதிகளையும் கொண்ட கட்டடத்தை அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு, நேற்று முன்தினம் (25) பாடசாலை அதிபர் திருமதி புஸ்பலீலா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் பெருந்தோட்ட கல்வி பிரிவின் அதிகாரி எஸ் முரளிதரன், எம் கேசவமூர்த்தி ,கிராமசேவகர் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

ஒன்றுகூடல்...

பதுளை- பாரதி மகா வித்தியாலயத்தின் 2003ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரணதர மாணவர்களின் 19ஆவது ஆண்டு ஒன்றுகூடல் அண்மையில் நடைபெற்றது. இதன்போது பழைய மாணவர்களால் கற்றல் உபகரணங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (எம்.செல்வராஜா)

இரத்தோட்டை- ரிவஸ்டன் வீதியில் மண்சரிவு

மஹேஸ் கீர்த்திரத்ன

இரத்தோட்டை- மெதவத்த தோட்டத்தின் ஒரு பகுதியில் மண்சரிவு ஏற்பட்டதன் காரணமாக, இரத்தோட்டையிலிருந்து ரிவஸ்டன் வரையான வீதியில் போக்குவரத்து தடை ஏற்பட்டுள்ளதென பொலிஸார் தெரிவித்தனர்.

ரிவஸ்டன் வீதியின் 23 மற்றும் 24ஆம் மைல் கல்லுக்கு இடைப்பட்ட பகுதியில் இந்த மண்சரிவு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மண்சரிவு ஏற்பட்ட வீதியை சீர்செய்யும் வரை இரத்தோட்டை-

ரிவஸ்டன் வீதியைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து மாற்று வீதியைப் பயன்படுத்துமாறும் பொலிஸார் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மொனராகலையில் உதவித் தொகையைப் பெறுவதில்

முதியவர்களுக்கு சிக்கல்

சுமணசிறி குணதிலக

மொனராகலை பிரதேச செயலகப் பிரிவில் வசிக்கும் சமுர்த்தி பயனாளிகள் மற்றும் முதியோர் கொடுப்பனவுகளைப் பெறுபவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அதிகாலை இரண்டு மணியில் இருந்து வரிசையில் நிற்கும் அவர்களுக்கு மாலை வரை உரிய உதவித் தொகை கிடைக்காமல் திரும்பிச் செல்ல வேண்டியுள்ளது.

நாளொன்றுக்கு 200 பேருக்கு மாத்திரம் கொடுப்பனவு வழங்கப்படுவதனால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாகவும் முன்னர் அந்தந்த பகுதி தபால் அலுவலகங்கள் ஊடாக குறித்த கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வந்தன.

எனினும் அண்மைக்காலமாக சமுர்த்தி வங்கியினால் இந்த கொடுப்பனவுகள் வழங்கப்படுவதால் தூரப் பகுதிகளிலுள்ள முதியவர்கள் கூட இந்த கொடுப்பனவைப் பெற, மொனராகலை நகரத்தில் அமைந்துள்ள சமுர்த்தி வங்கிகளுக்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இரண்டாயிரம் ரூபாய் எடுப்பதற்கு இரண்டு முறை வந்தால் நானூறு ரூபாய் செலவாவதால், தமது முதியோர் உதவித்தொகை கிராம தபால் நிலையங்களில் வழங்க நடவடிகை எடுக்குமாறும் வேண்டுகோள் விடுத்தனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்து சமுர்த்தி உதவி ஆணையாளர் டி.எல். சோமரத்ன, ஒரே நாளில் ஏராளமானோர் வருவதால் அதிகாரிகள் பல்வேறு சிரமங்களை சந்திக்க வேண்டியுள்ளது என தெரிவித்த அவர், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் கிராம அஞ்சல் அலுவலகங்கள் ஊடாக முதியோர் உதவித்தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றார்.

சீரற்ற வானிலையால்

மாத்தளையில் 263 பேர் பாதிப்பு

மஹேஸ் கீர்த்திரத்ன

மாத்தளை பிரதேசத்தில் நிலவும் சீரற்ற வானிலை காரணமாக, மாத்தளை மாவட்டத்தில் 53 குடும்பங்களைச் சேர்ந்த 263 பேர் நேற்று (26) காலைவரை பாதிக்கப்பட்டுள்ளனர் என மாத்தளை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவி பணிப்பாளர் சமிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அதற்கமைய, மண்மேடு சரிந்து விழுந்தமைக் காரணமாக உக்குவளை பிரதேச செயலகப் பிரிவின் 23 குடும்பங்களைச் சேர்ந்த 100 பேரும் மாத்தளை பிரதேச செயலகப் பிரிவில் 25 குடும்பங்களைச் சேர்ந்த 146 பேரும்

நாவுல பிரதேச செயலகப் பிரிவில் 5 குடும்பங்களைச் சேர்ந்த 17 பேரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், வீடொன்றும் முழுமையாக சேதமடைந்துள்ளது.

அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களை வழங்குவதற்கான நடவடிக்கை மாத்தளை மாவட்ட அதிபர் தேஜானி திலகரத்னவின் ஆலோசனைக்கமைய பிரதேச செயலகப் பிரிவுகளில் முன்னெடுக்கப்படவுள்ளது.

கண்டியைச் சேர்ந்த ஊடகவியலாளர்களால்

கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன

ஷேன் செனவிரத்ன

பொருளாதார பின்னடைவையும் பொது வசதிகள் அற்ற நிலையிலும் வாழ்ந்து வரும் கண்டி மற்றும் மாத்தளை ஆகிய இரு மாவட்டங்களுக்கு இடைப்பட்ட எல்லைக் கிராமமாகக் கருதப்படும் செலகெனசுலுகுனே கிராமத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு, கண்டியைச் சேர்ந்த ஊடகவியலாளர்களால் கற்றல் உபகரணங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டன.

இதற்கான உதவிகள் மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் மற்றும் கண்டி நகர சபை

உறுப்பினர் ஆனந்த சனத் குமார, சமூக ஆர்வலர் காமினி அதிகாரி ஆகியோர் வழங்கியிருந்தனர்.

சமயன் செல்லதுரை

பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு

ஆ.ரமேஸ்

இராகலை பொலிஸ் நிலைய பொலிஸ் சார்ஜண்ட் சமயன் செல்லதுரை தனது 34 வருட பொலிஸ் சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

1990ஆம் ஆண்டு கண்டி அஸ்கிரிய பொலிஸ் பயிற்சி கல்லூரியில் தனது பொலிஸ் பயிற்சியில் இணைந்து கொண்ட இவர், பயிற்சியின் பின் உப பொலிஸ் கான்ஸ்டபிள் பதவியை களுத்துறை தெற்கு பொலிஸ் நிலையத்தில் பொறுப்பேற்றார்.

பின் நுவரெலியா, இராகலை, யாழ், நெடுந்தீவு, திம்புல-

பத்தனை, மட்டகளப்பு, கந்தப்பளை ஆகிய பொலிஸ் நிலையங்களில் பொலிஸ் கான்ஸ்டபிளாக பதவி வகித்த இவர், மீண்டும் இராகலை பொலிஸ் நிலையத்திற்கு மாற்றப்பட்டு அங்கு பொலிஸ் சார்ஜண்டாக பதவி வகித்தார்.

நுவரெலியா கல்வி வலயத்திலிருந்து

எட்டு அதிபர்கள் ஓய்வு பெறுகின்றனர்

பீ.கேதீஸ்

நுவரெலியா கல்வி வலயத்தில் சேவையாற்றி வரும் 8 அதிபர்கள் இம்மாத இறுதியில் ஓய்வு பெறுகின்றனர்.

அந்தவகையில் 35 வருட அரச சேவையிலிருந்து அக்கரப்பத்தனை தமிழ் வித்தியாலய அதிபர் ஆறுமுகம் மாரிமுத்து, 33 வருட அரச சேவையிலிருந்து அக்கரப்பத்தனை போட்மோர் தமிழ் வித்தியாலய அதிபர் கிரிஸ்டோபர் சார்ள்ஸ், 34 வருட அரச சேவையிலிருந்து ஹோல்புறூக் ஆரம்ப பாடசாலை அதிபர் சுப்ரமணியம் புஸ்பனீனா, 35 வருட அரச சேவையிலிருந்து நானுஓயா கார்லிபேக் தமிழ் வித்தியாலய அதிபர் அந்தோனிமுத்து சவரிமுத்து, 31 வருட அரச சேவையிலிருந்து நானுஓயா கிளாஸ்கோ

தமிழ் வித்தியாலய அதிபர் சுப்பையாபிள்ளை கோகிலவாணி,35 வருட அரச சேவையிலிருந்து சென்கிளையார் தமிழ் மகா வித்தியால அதிபர் ஆறுமுகம் சத்தியமூர்த்தி, 40 வருட அரச சேவையிலிருந்து பத்தனை தமிழ் மகா வித்தியால அதிபர் சுப்பையா செல்வம் ஆகியோர் ஓய்வு பெறுகின்றனர். இவர்கள் நுவரெலியா கல்வி வலயத்தில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தர பரீட்சை மற்றும் க.பொ.த உயர் தர பரீட்சை ஆகிய பரீட்சைகளில் மாணவர்கள் அதிகளவில் சித்திபெறுவதற்கு பாரிய பங்காற்றியுள்ளார்கள்.

இவ்வாறு நுவரெலியா கல்வி வலயத்தில் கல்வியின் வளர்ச்சிக்கு பாரிய பங்காற்றிய இவர்களை நுவரெலியா வலயக் கல்விப் பணிப்பாளர், வலயத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளர், கல்வி அபிவிருத்தி உதவி கல்விப் பணிப்பாளர், உதவி கல்விப் பணி;ப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை சமூகம் தமது பாராட்டுக்களை தெரிவித்துள்ளனர்.

வெள்ளத்தில் மிதக்கும் நகரங்கள், பொறுப்பானவர்கள் கவனிக்கவும்

நகரமயமாக்கல், பொருளாதார அபிவிருத்தி எனும் அடிப்படையில் இலங்கையின் பல்வேறு நகரங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு, வீதிகள் புனரமைக்கப்பட்டு, நகர்களின் மத்தியில் பல அடுக்குமாடிக் கட்டடங்கள் நிறுவப்பட்டு, வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்படுகின்றன.

இவ்வாறான நிலையில், நேற்று முன்தினம் (25) அதிகாலை பெய்த கனமழை காரணமாக, கண்டி, அக்குறணை போன்ற பிரதேசங்களில் கடும் வெள்ளம் ஏற்பட்டதை அவதானிக்க முடிந்தது. இதனால் பல மில்லியன் ரூபாய் பெறுமதியான சேதங்களும் பதிவாகியிருந்தன.

இரு உயிர்களையும் காவு கொண்டிருந்த இந்த அனர்த்தம் இடம்பெறுவது இது முதல் தடவையல்ல. குறிப்பாக, அக்குறணை, நாவலப்பிட்டி போன்ற பகுதிகளில் இது போன்று, முன்னரும் பெரும் மழை வீழ்ச்சி பதிவாகும் காலப்பகுதிகளில், அந்நகரங்கள் வெள்ளத்தில் மூழ்கும் நிலை ஏற்பட்டிருந்தன.

இதிலிருந்து அப்பிரதேசத்துக்கு பொறுப்பான வடிகாலமைப்பு, அரச நிர்வாக அதிகாரிகள் எந்தப் பாடங்களையும் கற்றுக் கொண்டதைப் போல தோன்றவில்லை. இந்த நீர் பெருக்கெடுக்கும் பகுதிகளை பொது மக்கள் வசிப்பிடப் பகுதிகளினுள் வரவிடாமல் செய்யும் மாற்று முறைகளை மேற்கொள்ளாமை இந்த நவீன யுகத்தில் வியப்பில் ஆழ்த்தும் விடயமாக அமைந்துள்ளது.

குறிப்பாக, இந்தப் பகுதிகளில் பெருமளவில் வசிப்போர் சிறுபாண்மை இனத்தவராக இருப்பதும் இந்த கவனிப்பாரற்ற அசமந்த போக்கை கடைப்பிடிப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளதா எனும் சந்தேகங்களும் எழாமல் இல்லை.

இது போன்ற அனர்த்தங்களை துல்லியமாக எதிர்வுகூருவது கடினமான காரியம், ஏனெனில் இலங்கை ஒரு குட்டித் தீவு என்பதால், எந்நேரத்தில் எப்பகுதியில் எந்தளவு மழைவீழ்ச்சி பதிவாகும் என்பதை துல்லியமாக குறிப்பிட முடியாது. சர்வதேச வானிலை எதிர்வுகூரல்களாலும் சுமார் 80 சதவீதம் வரையில் சரியான கணிப்புகளை மாத்திரமே மேற்கொள்ள முடிகின்றது.

இந்நிலையில், இப்பகுதி மக்களின் உடைமைகளையும், உயிர்களையும் இயற்கை அனர்த்தங்களில் பாதுகாக்க போதுமான வசதிகளை ஏற்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். குறிப்பாக அப்பகுதிக்கு பொறுப்பாக திகழும் பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட, சம்பவம் இடம்பெற்ற தினம் தொலைக்காட்சி நிகழ்ச்சியில் பங்கேற்று நத்தார் தின கொண்டாட்டங்களில் ஈடுபட்டதை காண முடிந்ததே தவிர, மாறாக, பாதிக்கப்பட்ட மக்களை சென்று பார்வையிட்டு அவர்களின் இன்னல்களுக்கு உடனடித் தீர்வைப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

இதே நிலையே, கம்பஹா பகுதியிலும் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. அங்கும் அதீத நகரமயமாக்கல் காரணமாக, தாழ்நிலப் பகுதிகள் வெள்ள நீரால் நிரம்புகின்றமை வழமை. இந்தப் பகுதியில் முறையான வடிகாலமைப்பு திட்டத்தை மேற்கொள்ள தற்போதைய அரசாங்கத்தினால் நிதி ஒதுக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இதுபோலவே, இந்த கண்டி, அக்குறணை, நாவலப்பிட்டி நகர்களிலும் கவனம் செலுத்தப்படுமா? அல்லது இந்த நகரங்கள் தொடர்ந்தும் மிதக்கும் நகரங்களாகவே திகழுமா?

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk

வாழ்வியல் தரிசனம்

தெருவோரங்களில் குப்பை கொட்டுபவர்கள், தங்கள் வீடுகளின் முன்னால் கொட்ட மாட்டார்கள். ஆனால், இரவுப் பொழுதில், அதிகாலையில் திருடர்கள் போல வந்து, தங்களின் வீட்டுக் கழிவுகளை, ஊரவர்களின் வீடுகளுக்கு முன்னால் போடுவது வாடிக்கையான செயலாகி விட்டது.

நகரங்களில், பொது இடங்களில் தெருக்களிலும் இத்தகைய செயல்களை அச்சமின்றி செய்கின்றார்கள். பொலிஸாரோ அல்லது பொதுமக்களோ இதைக் கண்டுகொள்வதில்லை.

மேலும் வெற்றிலையை வாயில் சப்பியவாறு, அதை பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையில் துப்பி விடுகின்றவர்கள், மனச்சாட்சி இல்லாத பேர்வழிகள்.

முக்கியமாக பஸ் தரிப்பிடத்துக்கு வந்து போகும் பயணிகளில் அநேகர், எந்த வித வெட்கமும் இன்றி, இரத்த நிறத்தில் வெற்றிலையைத் துப்பிச் செல்கின்றார்கள். எவருமே இதைக் கண்டுகொள்ளாமல் இருக்கிறார்கள். பயணம் செய்தபடி இருக்கும் வாகனங்களில் இருப்போர், யன்னல் வழியாக எச்சில் துப்புவதால், வழியில் செல்பவர்கள், அருவருப்புடன் கோபத்துக்கு உள்ளாகின்றார்கள். ஷ

இந்த அநியாயங்கள் எப்பொழுது நிறுத்தப்படும்? சுகாதாரம் இன்றி வாழ்வது சிலருக்கு விருப்பனமான விடயமாகி விட்டது.

– பருத்தியூர் பால. வயிரவநாதன்

அரசியல்வாதிகளின் ‘இலட்சணங்கள்’

மொஹமட் பாதுஷ

ஆசிரியர்கள் தவறான பழக்கவழக்கங்கள் கொண்டவர்களாக இருந்துகொண்டு ஒழுக்கக் கேடான காரியங்களைத் தொடர்ச்சியாகச் செய்துகொண்டு தங்களது மாணவர்களை நல்வழிப்படுத்துவது என்பது முடியாத காரியமாகும்.

அதேபோல் ஆட்சியாளர்கள், அரசியல்வாதிகள், அதிகாரத்தில் இருப்பவர்களில் கணிசமானவர்கள் பொதுவெளியிலும் திரைமறைவிலும் குற்றங்களை இழைப்பவர்களாக, சமூகவிரோதிகளாக ஊழல் பெருச்சாளிகளாக, ஒழுக்கம் கெட்டவர்களாக வாழ்கின்ற நாட்டில் சட்டத்தை மக்களை நெறிப்படுத்துவது அவ்வளவு சாத்தியமில்லை.

‘கள்வனைப் பிடித்து விதானைக்கு வைத்தல்’என்று கிராமப் புறங்களில் ஒரு பழமொழியை சொல்வார்கள். அதாவது, குற்றமிழைப்பவனை ஒரு பதவிக்கு நியமித்தல் என இது பொருள்படும். இங்கே குற்றம் என்பது களவுமட்டுமல்ல, எல்லா வகையான சமூகவிரோத செயல்களும் அடங்கும்.

குற்றவாளியையே அதனைக் கட்டுப்படுத்தும் பதவியில் அமர்த்தினால் குற்றங்களைக் குறைக்கலாம் என்றஅர்த்தத்திலேயே இந்த பழமொழி பிரயோகிக்கப்படும். ஆனால், இதற்கு தலைகீழாக, அதாவது அந்தப் பதவி என்ற முகமூடிக்குள் ஒழிந்துகொண்டு குற்றமிழைக்கும் போக்கையே இலங்கையில் குறிப்பாக அரசியலில் அவதானிக்க முடிகின்றது.

ஜனாதிபதின் ஆலோசகராக பதவி வகித்தவரும் பேராசியருமான ஆஷ மாரசிங்கவை ஒரு வளர்ப்புப் பிராணியுடன் தொடர்புபடுத்தி முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் நாட்டில் தற்போது பேசுபொருளாகியுள்ளன. பிரபல வர்த்தகர் தினேஸ் சாப்டரின் கொலையை விடமக்கள் மட்டத்தில் இந்த விடயம் பரபரப்பாக பேசப்படுவதையும் காணமுடிகின்றது.

மக்களை ஆள்வதற்கு பொருத்தமற்ற பண்புகளைக் கொண்ட அரசியல்வாதிகள், அதிகாரத் தரப்பினர் செய்தகாரியங்களைப் பட்டியலிட்டுப் பார்த்தால்இந்த சம்பவம் கடைசியில் தான் இணைந்து கொண்டுள்ளது. இந்த சம்பவமோஅல்லது இவரோ முதலும் அல்ல. கடைசியுமல்ல.

இலங்கை அரசியலில் இப்படியான சாயல்களைக் கொண்டவர்களின் வகிபாகம் தொடர்ச்சியாக இருந்து வருவதைக் காண்கின்றோம்.

தலைசிறந்த பண்பாடுள்ள அரசியல் தலைவர்கள் விரல் விட்டு எண்ணக் கூடிய அளவில் இலங்கை அரசியலில் இருக்கின்றார்கள் என்பதை மறுப்பதற்கில்லை.

ஆயினும், படிப்பறிவு அற்றவர்கள், ஒழுக்கம் கெட்டவர்கள், ஊழல் பெருச்சாளிகள், போதைப் பொருள் வியாபாரிகள், மதுக்கடை உரிமையாளர்கள். குற்றச் செயல்களுடன் தொடர்பைக் கொண்ட பலரும் இதில் அங்கம் வகிக்கின்றார்கள்.

இன்னும் கண்டுபிடிக்கப்படாத ‘சிங்கங்களும், பிராணிகளும்’ இருக்கலாம். ஆனால், இந்த விவகாரத்தை தவிர்த்து விட்டு நோக்கினாலும்இலங்கை அரசியலில் கேடுகெட்ட அரசியல்வாதிகள் நிரம்பி இருப்பதை மக்கள் அறிவார்கள்.

குற்றங்களைத் தடுப்பதற்கு போதுமானளவுக்கு சட்டங்கள் இலங்கையில் இருக்கின்றன. அத்துடன் மக்களை நல்வழிப்படுத்துவதற்கான மதகோட்பாடுகளும் நிறையவே உள்ளன.

ஆனாலும் குற்றச் செயல்களையும், ஒழுக்கக் கேடானகாரியங்களையும் இன்று வரைகட்டுக்குள் வைத்திருக்க முடியாது போயுள்ளது. உண்மையில் இந்த நவீன உலகில் அது ஏறு முகமாக உள்ளதை காண்கின்றோம்.

இலங்கையின் அரசியலில் அல்லது நாடாளுமன்றத்தில் பல கல்வியியலாளர்கள், துறைசார் வல்லுனர்கள், சமூக சிந்தனையாளர்கள் இருக்கின்றார்கள். ஆயினும் 225 லீட்டர் பாலில் சில துளி விசம் விழுந்ததைப் போல ஒரு சிலரால் எல்லாம் கெட்டுநாசமாகியுள்ளது என்றுதான் தோன்றுகின்றது.

சுமார் இரு வருடங்களுக்கு முன்னர்எம். பி.க்களின் கல்வித் தகைமை பற்றிய தகவல்கள் வெளியாகியிருந்தது. அதன்படி அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்களில் 90 பேர் க.பொ.த. உயர்தரம் சித்தியடையாதவர்களாக உள்ளனர் என்றும் கணிசமானவர்கள் சாதாரணதரம் கூட சித்தியடையவில்லை என்றும் பரபரப்பானதகவல் வெளியானது.

அதுமட்டுமன்றி குற்றங்களுடன் தொடர்புபட்டவர்கள் போதைப் பொருள் வர்த்தகத்துடன் தொடர்பைக் கொண்டவர்கள் முறைகேடாக பணம் உழைப்பவர்கள் எனப்பலர் மக்கள் பிரதிநிதிகளாக இருந்துள்ளனர். சண்டியர்கள் முதற்கொண்டு பாதாளஉலகக் குழுக்களுடன் திரைமறைவு உறவைக் கொண்டவர்களும் அரசியல்வாதிகளாகவலம் வந்தனர் வருகின்றனர்.

இதனைத் தவிரநாட்டையே கொள்ளையடித்த அரசியல்வாதிகளையும் ஆட்சியாளர்களையும் நாம் கண்டிருக்கின்றோம். நாடும் மக்களும் இந்தநிலைமைக்கு வருவதற்கு காரணமானவர்கள் கூட இப்போது சுதந்திரமாக நடமாடித் திரிவதையும் கண்டுகொண்டுதான் இருக்கின்றோம்.

பொலிஸ் துறையில் கணிசமானவர்கள் இலஞ்சத்தில் மூழ்கிக் கிடந்தால் சட்டத்தை எப்படி முறையாக நடைமுறைப்படுத்த முடியும்? குற்றங்களைஎப்படிக் கட்டுப்படுத்தமுடியும்? அதேபோல் அரசியல்வாதிகளே இந்த இலட்சணத்தில் இருந்தால், நாட்டுப் பிரஜைகளை எப்படி திருத்த முடியும்?

நாடாளுமன்ற உறுப்பினராக, அரசியல்வாதியாக வருவதற்கு கல்வித் தகைமை முக்கியமானதாக ஆக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக முன்வைக்கப்படுகின்றது.

ஆனால், கல்வித் தகைமைமட்டும் போதாது. அதைவிட தனிமனித ஒழுக்கமும், சமூகசிந்தனையும், சட்டத்தை மதிக்கும் தன்மையும், பல்லினங்கள் பற்றியபுரிதலும் அவசியமாகும்.

பேராசியர் என்ற அடைமொழி கொண்ட ஒருவர் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டின் உண்மைத்தன்மை இன்னும் விசாரணையில் நிரூபிக்கப்படவில்லை. ஆனால், அவ்வாறு நிரூபிக்கப்படுமாயின், கல்விக்கும் அப்பாலான ஒழுக்க விழுமியங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்ற விடயம் இன்னுமொரு முறைவலுப்பெறுவதாக அமையும்.

ஒரு அரசியல்வாதிக்கு தனிப்பட்ட வாழ்க்கையும் பொதுவாழ்க்கையும் உள்ளது. ஆனால், இலங்கைப் போன்ற நாடுகளில் இரண்டுக்கும் ஒன்றுடன் ஒன்று கலந்ததாகவே இருக்கின்றது. அத்துடன், அரசியல்வாதிகளின் தனிப்பட்ட பண்பியல்புகளும் ஏதோ ஒரு வகையில் பொது அரசியலிலும் செல்வாக்கு செலுத்தலாம் என்பதையும் மறுக்கமுடியாது. அத்துடன் இப்போர்ப்பட்டவர்கள் சமூகத்தை நல்வழிப்படுத்தவே முடியாது.

ஒவ்வொரு மனிதனும் தனிப்பட்ட அடிப்படையில் குறை நிறைகளோடுதான் இருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. எனவே அதற்கு அரசியல்வாதிகள் விதிவிலக்காக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால், பொதுவாழ்வு என்று வந்துவிட்டால் தம்மை அவர்கள் மாற்றிக் கொள்வது தவிர்க்க முடியாதது.

ஏனெனில், சட்டத்தை மதிக்கின்ற> நல்ல பழக்கவழக்கங்களைக் கொண்ட மக்;கள் சமூதாயத்தை உருவாக்க வேண்டுமென்றால், அதற்குமேலே இருப்பவர்கள்அதாவது ஆட்சிஅதிகாரத்தில் இருப்பவர்கள் அதைவிடச் சிறந்த பண்பியல்புகளைக் கொண்டவர்களாக இருக்கவேண்டும்.

இல்லாவிட்டால், நாம் யாரால் ஆளப்படுகின்றோம் என்பதைமக்கள் மீள்வாசிப்புச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை இப்படியான மோசமான சம்பவங்கள் ஏற்படுத்திவிடுகின்றன.

மக்களுக்கு முன்மாதிரியாகச் செயற்படுவதற்குப் பதிலாக, நமதுமக்கள் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்திற்கு உள்ளே அடிப்படை ஒழுக்கம் கூட இல்லாமல் சண்டித்தனம் காட்டியதையும் நாட்டுமக்கள் கண்கூடாகக் கண்டார்கள். நாடாளுமன்றுக்கு வெளியே அவர்கள் செய்கின்ற கேடு கெட்ட செயல்களையும் அறிவார்கள்.

வறுமைக்காக தேங்காய் திருடிய பிள்ளை கைதானசந்தர்ப்பங்கள் நடந்துள்ளன. அறியாத் தனமாக குற்றத்தைப் புரிந்த நபர்களும் தண்டிக்கப்பட்டிருக்கலாம். ஆனால் நாட்டைக் கொள்ளையடித்தவர்கள் லாவகமாக தப்பித்துக் கொண்டார்கள் என்பதே நிதர்சனம்.

அதேபோன்று, எல்லோருக்கும் முன்மாதிரியாக இருக்க வேண்டிய தரப்பினர் எல்லாம் தெரிந்துகொண்டு குற்றமிழைப்பதும், அருவெறுக்கத்தக்க செயல்களில் ஈடுபடுவதும், அதனைசட்டம் வேறுவிதமாகக் கையாள்வதும் ஏற்புடையதல்ல என்றாலும், அதுநமக்குப் புதிதல்ல.

விபச்சாரி விபச்சாரத்தில் ஈடுபடுவதும், பரவலாக கள்வன் என அறியப்பட்டவன் களவில் ஈடுபடுவதும் ஆச்சரியமானவிடயமல்ல.

ஆனால், தன்னை ஒரு பெரிய ஆளாக, சமூக அந்தஸ்து உள்ளவராக, ஒழுக்கமுள்ளவராக காட்டிக் கொண்டு திரைமறைவில் தலைகீழாக செயற்படுகின்ற பசுத்தோல் போர்த்திய புலிகள் தான் இங்குஆபத்தானவர்கள்.

இவ்வாறவர்கள் அரசியலில் மட்டுமல்ல சமூகத்தின் எல்லாமட்டங்களிலும் இருக்கின்றார்கள். ஊரில் பெரியவர், ஆசிரியர், மதபோதகர், சாமியார், பரிகாரி.... எனபலவேடங்களில் அவர்கள் திரிகின்றார்கள்.

ஆனால், இவர்கள் எல்லோரையும் விட ஆட்சியாளர்களும் அரசியல்வாதிகளும் முக்கியமானவர்கள். ஏனெனில் அவர்கள் சமூகத்தில் ஏற்படுத்துகின்ற தாக்கம் அதிகமானது என்பதை நினைவிற் கொள்ளவேண்டும்.

எனவே, முக்கியபொறுப்புக்களில் உள்ளவர்கள் படித்தவர்களாக இருப்பதுமட்டுமன்றி, சட்டத்தை மதிப்பவர்களாகவும் மக்களை, நேசிப்பவர்களாகவும் தனிமனித ஒழுக்கத்தை எல்லா தருணங்களிலும் பேணுவர்களாகவும் தமது இலட்சணங்களை வகுத்துக் கொள்ளவேண்டியது அவசியமாகும்.

அந்தவகையில், இலங்கையில் கணிசமானஅரசியல்வாதிகளின் நடத்தைக் கோலங்கள், இலட்சணங்கள் தொடர்ச்சியாக முகம் சுழிக்கும் வண்ணம் இருந்து வருவதைக் காணமுடிகின்றது. இப்போது பேசப்படும் செல்லப் பிராணிவிவகாரம் இதில் ஒருசம்பவம் மட்டுமே.

இதற்குமுன்னர் இடம்பெற்றகுற்றங்கள், ஒழுக்கக் கேடுகள், ஊழல்களுக்கு எதிராக அரசாங்கமும் சட்டமும் சட்டத்தை முறையாக நடைமுறைப்படுத்தியிருந்தால், பிராணிகள் மட்டுல்ல மக்களும் நாடும் கூட காப்பாற்றப்பட்டிருப்பார்கள்.

கடிதங்கள்

மடுவில் யானைகளால் பதற்றம்

மன்னார் மாவட்டம், மடு பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பெரியபண்டிவிரிச்சான், சின்ன பண்டிவிரிச்சான் கிராமங்களில், அண்மைக்காலமாக யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர். வெள்ளிக்கிழமை (23) சின்னப்பண்டிவிரிச்சானில் தனியார் ஒருவரின் காணிக்கு பின்னால் நின்றிருந்த யானை, 54 வயது மதிக்கதக்க ‘வாவா’ என்று அழைக்கப்படும் கிறிஸ்தோப்பர் ஸ்டான்லி என்பரைத் தாக்கி கொன்றுள்ளது. மேலும், பெரியபண்டிவிரிச்சான் பகுதியில், கடந்த வாரம், வயல் வெளிக்கு அருகில் இருக்கும் வீட்டுக் காணிகளுக்குள், யானை புகுந்து பெறுமதிமிக்க மரங்களை சேதப்படுத்தி வருகின்றது. இதைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை (30) அதிகாலை, பெரியபண்டிவிரிச்சான் கிராமத்தின் நடுப்பகுதி காணிகளுக்குள் யானை உட்புகுந்து, அட்டகாசம் செய்து வருகின்ற நிலையில், மக்கள் அச்சத்தில் வீதிக்கு வந்துள்ளனர்.

அன்றிரவு வரை மடு வனஜீவராசிகள் திணைக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் அப்பகுதி இளைஞர்கள் இணைந்து, யானையை காட்டுக்குள் துரத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

மேலும், இக்கிராமங்களில் யானைகள் தொல்லை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளதால், யானை வேலி போன்றவற்றை அமைத்தும் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொண்டும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு, குறித்த கிராமங்களைச் சேர்ந்த மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– எஸ். றொசேரியன் லெம்பேட்

மும்பை

படப்பிடிப்புத் தளத்தில் உயிரை மாய்த்த நடிகை; பிரபல நடிகர் கைது

மும்பையில் பிரபல சின்ன த்திரை நடிகையான `துனிஷா சர்மா` தூக்கிட்டுத் தன் உயிரை மாய்த்த சம்பவம் பெரும்அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

20 வயதான குறித்த நடிகை கடந்த சனிக்கிழமை படப்பிடிப்பு தளத்தில் உள்ள கழிவறையில் வைத்து தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

இந்நிலையில் இது குறித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் நடிகை துனிஷாவும் அவருடன் நடித்து வந்த ஷீசான் கான் என்பவரும் காதலித்து வந்துள்ளனர் எனவும், கடந்த 15 நாட்களுக்கு முன்னர் இருவரும் கருத்து முரண்பாடு காரணமாகப் பிரிந்துள்ளனர் எனவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் காதல் தோல்வியால் ஏற்பட்ட மன உளைச்சலினாலேயே துனிஷா இவ் விபரீத முடிவை எடுத்துள்ளார் எனவும் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் துனிஷாவைத் தற்கொலைக்குத் தூண்டியதாக ஷீசான் கான் மீது வழக்குப் பதிவு செய்து கைது செய்துள்ள பொலிஸார், அவரை 4 நாட்கள் காவலில் வைத்து விசாரிக்க நீதிமன்றத்தில் அனுமதி பெற்றுள்ளனர்.

இந்நிலையில் நடிகை துனிஷாவின் மரணம் அவரது ரசிகர்கள் மத்தியிலும் சின்னத்திரை வட்டாரத்திலும் பெரும் அதிர்ச்சியையும் சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

ஒடிசா

தக்காளியில் நத்தார் தாத்தா

ஒடிசா மாநிலம், கோபால்புர் பகுதியில் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு 27 அடி உயரத்தில் பிரம்மாண்டமான நத்தார் தாத்தாவின் மணல் சிற்பமொன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடற்கரையில் அமைந்துள்ள இச்சிற்பத்தை உலகப் புகழ் பெற்ற மணற் சிற்பி 'சுதர்சன் பட்நாயக்' வடிவமைத்துள்ளார்.

இச்சிற்பமானது ஒன்றரை தொன் தக்காளியும் மணலும் கொண்டு வடிவமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது .

இச்சிற்பத்தை முடிக்க சுதர்சனின் 15 மாணவ மாணவியர்கள் உதவி புரிந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உத்தர பிரதேசம்

சுரங்கம் தோண்டி வங்கியில் கொள்ளை

உத்தரப்பிரதேசம், கான்பூரில் 10 அடி நீளத்திற்கு சுரங்கம் தோண்டி வங்கியொன்றில் இருந்து இலங்கை மதிப்பில் சுமார் 4.41 கோடி ரூபாய் மதிப்பிலான தங்கத்தை மர்ம நபர்கள் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் ' வங்கியின் அருகிலுள்ள பாழடைந்த வீடொன்றில் இருந்து சுரங்கம் தோண்டி உள்ளே புகுந்த கொள்ளையர்கள், வங்கியில் இருந்த எச்சரிக்கை மணியை துண்டித்து விட்டு, நவீன கருவிகள் மூலம் வங்கி லொக்கரை உடைத்துள்ளதோடு, சிசிடிவி கெமராக்களையும் வேறுபக்கமாகத் திருப்பி வைத்துவிட்டு கொள்ளையடித்துள்ளனர் எனத் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் 1 கிலோ 8 கிராம் நகைகள் திருடு போனதாகவும், கைரேகை பதிவுகளைப் கைப்பற்றி விசாரித்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வேளாங்கண்ணியில் மௌன ஊர்வலம்

தமிழகத்தில் கடந்த 18 ஆண்டுகளுக்கு முன்னர் டிசெம்பர் மாதம் 26 ஆம் திகதி அதிகாலை இந்தோனேசியாவில் உள்ள சுமத்ரா தீவு கடல் பகுதியில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தால், சுனாமி என்னும் ஆழிப்பேரலை 30 மீற்றர் உயரத்துக்கு கடலில் எழுந்து 14 நாடுகளில் கடலோரப் பகுதிகளை தாக்கியது. இவ் ஆழிப் பேரலையினால் இலங்கை, இந்தியா, இந்தோனேசியா, , மாலத்தீவு, தாய்லாந்து, மலேசியா உட்பட 14 நாடுகளில் கரையோரத்தில் இருந்த சுமார் 2 ,29,866 பேர் உயிரிழந்தனர்.குறிப்பாக தமிழகத்தில் சுனாமியால் சென்னை முதல் குமரி வரை கிழக்கு கடலோர பகுதிகள் பாதிக்கப்பட்டன.

10,000 க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். அதிகபட்சமாக நாகப்பட்டினத்தில் 6,065 பேரும், கடலூரில் 610 பேரும், சென்னையில் 206 பேரும் உயிரிழந்தனர்.

இந்நிலையில் , சுனாமியின் 18 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் நேற்றைய தினம் மௌன ஊர்வலமொன்று நடைபெற்றது. இதில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு உயிரிழந்த தம் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தி இருந்தனர்.

உத்தர பிரதேசம்

மது அருந்துபவர்களைத் திருமணம் செய்ய வேண்டாம்

குடிப்பழக்கம் உள்ளவர்களுக்குப் பெண்களைத் திருமணம் செய்து வைக்க வேண்டாம் என மத்திய அமைச்சர் 'கௌஷல் கிஷோர்' தெரிவித்துள்ளார்.

உத்தரபிரதேச மாநிலம் லம்புவா சட்டசபை தொகுதியில் நடைபெற்ற ஒரு போதைப்பழக்க மீட்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது "எனது மகன் ஆகாஷ் கிஷோருக்கு அவனது நண்பர்களால் மதுப்பழக்கம் ஏற்பட்டது.

அதனால் அவனை ஒரு போதைப் பொருள் மறுவாழ்வு மையத்தில் சேர்த்தோம். அவன் அப் பழக்கத்தில் இருந்து மீண்டுவிட்டதாகக் கருதி, 6 மாதங்கள் கழித்து திருமணம் செய்துவைத்தோம். ஆனால் திருமணத்துக்குப் பின்னர் அவன் மீண்டும் குடிக்கத் தொடங்கினான்.

அதனாலேயே இறந்தும் போனான். 2 ஆண்டுகளுக்கு முன்பு அவன் இறந்தபோது என் பேரனுக்கு 2 வயதுகூட ஆகவில்லை. 'ஒரு குடிகாரரின் ஆயுட் காலம் மிகவும் குறுகியது. நான் ஒரு எம்.பி.யாகவும், என் மனைவி ஒரு எம்.எல்.ஏ.வாகவும் இருந்துமே எங்கள் மகனைக் காப்பாற்ற முடியவில்லை.

அப்படி இருக்கும்போது, ஒரு சாதாரண மனிதரால் எப்படி தங்கள் பிள்ளையைக் காப்பாற்ற முடியும்? நான் என் மகனை காப்பாற்றத் தவறியதால் என் மருமகள் விதவை ஆகிவிட்டார்.

தயவுசெய்து, உங்கள் மகள்கள், சகோதரிகளுக்கு இந்த நிலை வராமல் பார்த்துக்கொள்ளுங்கள். குடிப்பழக்கம் உள்ளவர்களுக்கு உங்கள் வீட்டு பெண்களைத் திருமணம் செய்து கொடுக்காதீர்கள். குடிப்பழக்கம் உள்ள ஒரு அதிகாரியைவிட, அப் பழக்கம் இல்லாத ஒரு கூலித்தொழிலாளி நல்ல மாப்பிள்ளைதான்தெரிவித்தார்.

சுனாமி நினைவேந்தல்...

இலங்கையில் சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட இந் நாளை அரசாங்கம் தேசிய பாதுகாப்பு தினமாக பிரகடனப்படுத்தியுள்ளது முன்னிட்டு நாட்டில் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற நினைவேந்தல் நிகழ்வுகள்

மாலைத்தீவு

முன்னாள் ஜனாதிபதிக்கு 11 ஆண்டுகள் சிறை

லஞ்சம் மற்றும் சட்டவிரோத பணப் பரிவர்த்தனை வழக்கில் மாலைத்தீவின் முன்னாள் ஜனாதிபதி 'அப்துல்லா யாமீனுக்கு' 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை, மற்றும், 5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அபராதம் விதித்து, அந்நாட்டின் குற்றவியல் நீதிமன்றம் நேற்றும் முன்தினம் (25) தீர்ப்பளித்தது.

மாலைத்தீவின் ஜனாதிபதியாகக் கடந்த 2013 ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை பதவி வகித்தவர் அப்துல்லா யாமீன்.

இவர் மீது 'அரசுக்குச் சொந்தமான தீவு ஒன்றை குத்தகைக்கு அளிக்க லஞ்சம் பெற்றார்" என்ற குற்றச் சாட்டு சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. இவ் வழக்கில் அவர் மீதான குற்றச்சாட்டுகளை உறுதி செய்த குற்றவியல் நீதிமன்றம், சட்டவிரோத பணப் பரிவர்த்தனை குற்றத்துக்கு 7 ஆண்டுகள் மற்றும் லஞ்சம் பெற்ற குற்றத்துக்கு 4 ஆண்டுகள் என மொத்தமாக 11 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து தீர்ப்பளித்தது.

அப்துல்லா யாமீனுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படுவது இது முதல்முறையல்ல. கடந்த 2019ஆம் ஆண்டு அரசாங்கப் பணத்தை சொந்த ஆதாயத்துக்கு பயன்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட நிலையில் அவருக்கு எதிரான ஆதாரங்களில் குறைபாடுகள் உள்ளதாகவும், குற்றச்சாட்டுகள் முழுமையாக நிரூபிக்கப்படவில்லை என்றும் கூறி, 2 ஆண்டுகளுக்குப் பின்னர் அத்தீர்ப்பை உச்சநீதிமன்றம் இரத்து செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில்

முன்னிலையில் அவுஸ்திரேலியா

தென்னாபிரிக்காவுக்கெதிரான இரண்டாவது டெஸ்டில் அவுஸ்திரேலியா முன்னிலையில் காணப்படுகின்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் அவுஸ்திரேலியா வென்ற நிலையில், மெல்பேணில் நேற்று ஆரம்பித்த இரண்டாவது போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியாவின் அணித்தலைவர் பற் கமின்ஸ், தென்னாபிரிக்காவை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, ஆரம்பத்திலேயே சரெல் எர்வியை ஸ்கொட் போலண்டிடம் இழந்தது. பின்னர் தெனியுஸ் டி ப்ரூன், கமரொன் கிறீனிடம் வீழ்ந்திருந்தார். தொடர்ந்து அணித்தலைவர் டீன் எல்கர் ரண் அவுட்டானதுடன், அடுத்த பந்திலேயே மிற்செல் ஸ்டார்க்கிடம் தெம்பா பவுமா வீழ்ந்திருந்தார். இதையடுத்து காயா ஸொன்டோவும் ஸ்டார்க்கிடம் வீழ்ந்தார்.

இந்நிலையில் ஜோடி சேர்ந்த கைல் வெரைன், மார்கோ ஜன்சன் இனிங்ஸை நகர்த்திய நிலையில், 52 ஓட்டங்களுடன் வெரைனும், 59 ஓட்டங்களுடன் ஜன்சனும், ககிஸோ றபடாவும் கிறீனிடம் வீழ்ந்தனர். பின்னர் கேஷவ் மஹராஜ் நேதன் லையனிடமும், லுங்கி என்கிடி கிறீனிடமும் விழ, சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 189 ஓட்டங்களையே தென்னாபிரிக்கா பெற்றது.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடி வரும் அவுஸ்திரேலியா, நேற்றைய முதல் நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 45 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் டேவிட் வோர்னர் 32 ஓட்டங்களுடனும், மர்னுஸ் லபுஷைன் ஐந்து ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். வீழ்த்தப்பட்ட உஸ்மான் கவாஜாவின் விக்கெட்டை றபாடா வீழ்த்தியிருந்தார்.

சீனா

'தொற்று விபரங்களை வெளியிட மாட்டோம்' –சீனா அதிரடி

சீனாவில் கொரோனாத் தொற்றுப் பரவலானது மீண்டும் தீவிரமடைந்து வருகின்றது.

குறிப்பாக அந்நாட்டில் ஒமைக்ரோனின் `BF.7` துணை வைரஸ்களின் பரவலானது நாளுக்கு நாள் வெகுவான அதிகரித்து வருவதால் அந்நாட்டின் பல பகுதிகளிலும் கடுமையான ஊரடங்குக் கட்டுப்பாடுகளை அரசு அமுல்படுத்தி வருகின்றது.

அதே சமயம் சீன அரசு வெளியிடும், தொற்று விவரங்கள் சந்தேகத்திற்குரிய வகையில் உள்ளதாக அண்மைக்காலமான உலக நாடுகள் குற்றம் சுமத்தி வருகின்றன.

குறிப்பாக லண்டனைச் சேர்ந்த சுகாதார தரவு நிறுவனமான 'ஏர் பினிட்டி' கடந்த சில நாட்களுக்கு முன்பு அதிர்ச்சி தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதாவது சீனாவில் தினமும் ஏறத்தாழ 10 லட்சம் பேர் கொரோனாப் பாதிப்பு ஆளாகின்றனர் எனவும், 5 ,000க்கும் மேற்பட்டோர் தினமும் உயிரிழக்கின்றனர் எனவும் கூறியுள்ளது.

ஆனால் இது குறித்து சீன அரசாங்கம் எந்தவித விளக்கமும் அளிக்கவில்லை. இந்நிலையில் "இதுவரை தினசரி கொரோனாப் பாதிப்பை வெளியிட்டு வந்த சீனாவின் தேசிய சுகாதார மையம் இனி கொரோனாப் பாதிப்பு விவரங்களை வெளியிட மாட்டோம் என கடந்த 25 ஆம் திகதி அறிவித்துள்ளது"

அதே சமயம் கொரோனா பாதிப்பு விவரங்கள் இனி சீன நோய் கட்டுப்பாட்டு மற்றும் தடுப்பு மையத்தால் வெளியிடப்படும் எனவும் கூறியுள்ளது.

இந்த மாற்றத்திற்கான காரணங்கள் என்ன என்பது குறித்து சீன அரசு தெரிவிக்கவில்லை. சீனாவின் இந்நடவடிக்கையாது உலக நாடுகள் மத்தியில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்கா

கோப்பி பிரியர்களே உஷார்

ஆய்வில் வெளியான அதிர்ச்சித் தகவல்

'தினமும் இரண்டு கோப்பைகளோ அல்லது அதற்கு மேலாகவோ கோப்பி அருந்தினால் இதய நோயால் இறக்கும் அபாயம் இரட்டிப்பாகலாம்' என மருத்துவ ஆய்வொன்றில் தெரிய வந்துள்ளது.

உயர் இரத்த அழுத்த நோயாளிகளுக்கு கோப்பியின் நேர்மறையான விளைவுகள் பொருந்துமா? அவர்கள் மீது கிரீன் டீயின் தாக்கம் என்ன? என்பது குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்விலேயே இத் தகவல் வெளியாகியுள்ளது.

இவ் ஆய்வின் முடிவுகளை 'அமெரிக்கன் ஹார்ட் அசோசியேஷன்' என்ற

இதழானது அமையில் வெளியிட்டுள்ளது.

அதன்படி, உயர் இரத்த அழுத்தம் அதாவது 160/100 mmHg அல்லது அதற்கு மேல் உள்ளவர்கள் 2 அல்லது அதற்கு மேற்பட்ட கோப்பைகள் கோப்பி அருந்துவதால், இதய நோயால் இறக்கும் அபாயத்தை இரட்டிப்பாக்குகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனி

கலைப் பொக்கிஷங்களை கால்வாயில் தேடும் பொலிஸார்

ஜேர்மனியின் தலைநகர் பெர்லினில் உள்ள ஐரோப்பாவின் மிகப்பெரிய அருங்காட்சியகமான 'கிரீன் வோல்ட்டில்' கடந்த 2019 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மர்ம நபர்கள் சிலரால் 120 மில்லியன் டொலர் மதிப்பிலான கலைப்பொருட்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

மிகவும் பழைமை வாயந்த அருங்காட்சியகமான இதில் 18ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த அரிய நகைகள், கலைப்பொருட்கள் வைக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், குறித்த கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட 6 பேர் அண்மையில் நீதிமன்றத்தில்

ஆஜர்படுத்தப்பட்டனர்.

அதேசமயம் திருடப்பட்ட நகைகளில் பெரும்பாலாவை மீட்கப்பட்டுள்ளதாகவும், மாயமான நகைகளை தேடும் பணியில் ஈடுபடுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் லேண்ட்வேர் கால்வாயில் குறித்த கலைப் பொருட்கள் வீசப்பட்டிருக்கலாம் என சந்தேகித்த பொலிஸார் குறித்த கால்வாயில் இறங்கி தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

செல்சி செல்லும் றைஸ்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான வெஸ்ட் ஹாம் யுனைட்டெட்டின் மத்தியகளவீரரான டெக்லான் றைஸை, அடுத்த பருவகாலத்தில் மூன்றாண்டு முயற்சியொன்றுக்குப் பின்னர் இன்னொரு பிறீமியர் லீக் கழகமான செல்சி கைச்சாத்திடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஏனெனில் வெஸ்ட் ஹாமுடன் இன்னும் நடப்புப் பருவாகலத்தை விட இன்னும் ஓராண்டே 23 வயதான றைஸின் ஒப்பந்தம் இருக்கின்ற நிலையில், அவர் புதிய ஒப்பந்த முன்னெடுப்புகளை நிராகரித்துள்ளார். எவ்வாறாயினும் பருவகால முடிவிலேயே செல்சிக்கு றைஸ் செல்ல வெஸ்ட் ஹாம் அனுமதிக்கும் எனத் தெரிகிறது.

சிறைச்சாலை திணைக்களத்துக்காக பதக்கமீட்டியோர் கௌரவிப்பு

எஸ். நிதர்ஷன்

அரச திணைக்களங்களுக்கிடையிலான மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி சிறைச்சாலை திணைக்களத்துக்காக அதிக பதக்கங்களைப் பெற்ற வீரர்கள் யாழ்ப்பாணத்தில் கௌரவிக்கப்பட்டனர்.

வெற்றி பெற்றவர்களை வவேற்கும் நிகழ்வானது, யாழ்ப்பாணம் சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் உத்தியோகத்தர்களால் அண்மையில் நடாத்தப்பட்டது.

யாழ். சிறைச்சாலையின் வீரர்களான யூட் பீரிஸ் உயரம் பாய்தல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும், ரி.சி. அன்ரு குண்டு போடுதல் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தையும் தட்டெறிதலில் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றனர்.

எஸ். சியானியஸ் ஈட்டி எறிதல் போட்டியில் தங்கப் பதக்கத்தையும், எச்.ஜே. அபேயரத்தன 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் வெண்கலப் பதக்கத்தையும், ஜே. றொகான் 4 4 00 மீற்றர் அஞ்சலோட்டத்தில் வெண்கலப் பதக்கத்தையும் 4 100 அஞ்சலோட்டத்தில் வெண்கல பதக்கத்தையும் என மொத்தமாக 7 பதக்கங்களைப் பெற்றனர்.

பாகிஸ்தான்

'அந்த ஹோட்டலில் தங்க வேண்டாம்'

அமெரிக்கா எச்சரிக்கை

பாகிஸ்தானின் தலைநகரான இஸ்லாமாபாத்தில் உள்ள " பிரபல நட்சத்திர ஹோட்டலான மரியாட்டில் தங்க வேண்டாம்" என அமெரிக்க அரசு தனது குடிமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. குறித்த ஹோட்டலில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக அமெரிக்கா உளவுத்துறைக்குக் கிடைத்த தகவலையடுத்தே பாகிஸ்தானிலுள்ள தமது நாட்டவர்களுக்கு அமெரிக்கா எச்சரித்துள்ளது.

அத்துடன் விடுமுறை நாட்களில், வழிபாட்டுத் தலங்கள் மற்றும் மக்கள் நெரிசல் மிக்க இடங்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறும் அமெரிக்க அரசு கேட்டுக்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

லெய்ப்ஸிக்கிலிருந்து வெளியேறும் கவிரொல்?

ஜேர்மனிய புண்டெலிஸ்கா கால்பந்தாட்டக் கழகமான ஆர். பி லெய்ப்ஸிக்கின் பின்களவீரரான ஜோஸ்கோ கவிரோலை கைச்சாத்திட ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்ரிட், இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகங்களான செல்சி, மன்செஸ்டர் சிற்றி ஆகியன முயல்வதாகக் கூறப்படுகிறது.

லெய்ப்ஸிக்குடன் இன்னும் ஐந்தாண்டு ஒப்பந்தத்தை கவிரொல் கொண்டிருக்கின்றபோதும், உலகக் கிண்ணத் தொடரில் சிறப்பாகச் செயற்பட்டதால் கவனம் பெற்றுள்ளார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 14 டிசெம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.